## இலங்கை நீதிபதிகள் நிறுவகம் - 2015

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகல்வல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1985 இன் 46 ஆம் இலக்க இலங்கை நீதிபதிகள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 10(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை நீதிபதிகள் நிறுவகத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பணிக்கொடை ஒதுக்கீட்டுக் கணக்கின் மீதி ரூபா 125,839 தொகை குறைத்துக் காணப்பிக்கப்பட்டிருந்தது. அதில் முன்னைய ஆண்டுகளுக்குரிய ரூபா 66,442 மற்றும் மீளாய்வாண்டிற்குரிய ரூபா 59,397 என்பன இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நன்கொடையாகக் கிடைத்த 570 புத்தகங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நீதி மன்றங்களை வலையமைப்பிற்கு உட்படுத்தும் செயற்திட்டத்திற்காக மீளாய்வாண்டின் இறுதியில் செலுத்த வேண்டிய ரூபா 48,469 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 137 மற்றும் 138 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களை அங்கீகரிக்காமலும் சான்றுப்படுத்தாமலும் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 449,745 முற்பணம் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 7.1 ஆம் பந்தி | மாதமொன்றிற்கு 20 மணித்தியாலத்தை விஞ்சி மேலதிக நேரப் படியாக 07 ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 124,179 தொகைக்காக வரிசை அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2004 சனவரி 26 ஆந் திகதிய 2004/புஸ்த/01 ஆம் இலக்க நூலக மற்றும் ஆவண சேவைகள் சபை சுற்றறிக்கையின் 3.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 2,285,125 பெறுமதியான நூலகப் புத்தகங்கள் தொடர்பாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டில் நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 1,902,742 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 6,196,073 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவில் ரூபா 4,293,331 வீழ்ச்சியொன்றினை காணக்கூடியதாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வாண்டின் மீண்டெழும் பெறுவனவுகள் ரூபா 2,632,807 குறைவடைந்தமையும், சம்பளம் மற்றும் வேதனங்கள் ரூபா 1,955,183 தொகை அதிகரித்தமையும் நிதி விளைவின் இந்தக் குறைவிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும்போது 2011 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் பங்களிப்பு ரூபா 4,318,220 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அது ரூபா 7,670,047 வரை அதிகரித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

1985 இன் 46 ஆம் இலக்க இலங்கை நீதிபதிகள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் நீதிமன்ற உத்தியோகத்தர்களின் தொழில்சார் தரத்தை விருத்தி செய்தல் மற்றும் அவர்களின் அறிவினை விருத்தி செய்வதற்காக கூட்டங்கள், சம்மேளனங்கள், விரிவுரைகள், செயலமர்வு மற்றும் மாநாடுகளை ஒழுங்கமைத்தல் என்பன நிறுவகத்தின் பிரதான இலக்காக இருந்தது.

மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டின் போது நடாத்தப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான பரீட்சிப்பின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) (i) 2015 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் நீதிமன்ற உத்தியோகத்தர்களுக்காக 56 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும், 08 செயலமர்வுகளையும் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை 23 ஆகவும் செயலமர்வுகளின் எண்ணிக்கை 01 ஆகவும் இருந்தன. இதன் பிரகாரம் ஒட்டுமொத்த செயலாற்றல் 37.3 சதவீதமாக இருந்தது.

(ii) மேல்நீதின்ற நீதிபதிகள், மாவட்ட நீதிபதிகள் மற்றும் நீதவான் நீதிமன்ற நீதிபதிகள், தொழில் நியாயசபை தலைவர்கள் ஆகியோருக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தும் காலம் நாளொறிற்கு 03 மணித்தியாலங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் 66 மணித்தியாலங்கள் மாத்திரம் நிகழ்ச்சித்திட்டம் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 2,684,400 செலுத்தப்பட்டமையால் மணித்தியாலத்திற்கான செலவினம் ரூபா 40,672 ஆக இருந்தது.

(ஆ) நீதிமன்றங்களை வலைப்பின்னல்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஒக்தோபர் வரை ரூபா 732,845 செலவிடப்பட்டிருந்தும் இந்த செயற்திட்டத்தின் வசதிகளைப் பயன்படுத்தி மாநாடுகளை நடாத்துவதற்கு தவறியிருந்தது.

**4.2 நிதியத்தின் குறைவான பயன்பாடு**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் நிறுவகத்தால் அரச வங்கியொன்றில் பேணிச் செல்லப்படுகின்ற நடைமுறைக் கணக்கில் ஆண்டு முழுவதும் ஆகக் குறைந்த மீதியாக ரூபா 13.5 மில்லியன் தொகையொன்று பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதுடன் அதனை குறுகியகால முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்துதல் தொடர்பாக நிறுவகம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**5.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

(அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8(1) ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆந் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் PED 12 ஆம் இலக்கத்தின் 5.2.5 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு நிதியாண்டிற்காகவும் பாதீடொன்று தயாரித்து உரிய நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு மூன்று மாதங்களுக்கு முன்னர் நிறுவகத்தின் நிர்வாக சபையில் அங்கீகரிக்கப்பட்டு அதன் பிரதி உரிய ஆண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களுக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 18 விடயங்களில் பாதீட்டிற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் மற்றும் பாதீட்டிற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையே 23 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.